

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அமெரிக்காவில் உள்ள கென்சா பல்கலைக்கழகத்தில் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி சமூக நீதி இருக்கை உருவாக்குவதற்கான அனுமதியை சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவரும், சட்டக்கதிர் ஆசிரியருமான டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் பெற்றுள்ளதையும் இதற்கான வைப்புத் தொகையை செலுத்துவதற்கு கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அரசே வழங்கிட வேண்டும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்து உள்ளார். இதனைத் தொடர்ந்து தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் அனைத்து நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றதற்கு வாழ்த்துப் தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.6.2024) முகாம் அலுவலகத்தில், மக்களவை கொறடாவாக நியமிக்கப் பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### குவைத் தீ விபத்து ; உயிரிழந்த தமிழர்கள் குடும்பத்தாருக்கு தலா ரூ.5 லட்சம் நிதி உதவி!

# 7 தமிழர்களின் உடல்களைக் கொண்டுவர துரித நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை. ஜூன் 15 -**

**குவைத் நாட்டில் நடைபெற்ற தீ விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் உடல்கள் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைத்திடவும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நிவாரண உதவி அறிவித்தும் காயமடைந்தவர்களுக்கு தேவையான உதவிகள் அளிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

குவைத் நாட்டின் மங்காப் என்ற இடத்தில் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டடத்தில், 12 -6 - 2024 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த வீராசாமி மாரியப்பன், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எபமேசன் ராஜு, கடலூர் மாவட்டத்தைச்சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி சின்னதுரை,

சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த கோவிந்தன் சிவசங்கர், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த புனாஃப் ரிச்சர்ட் ராய், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கருப்பணன் இராமு மற்றும் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த முகமது ஷெரிப் ஆகிய தமிழர்கள் உயிரிழந்துள்ளார்கள் என்ற செய்தியை அறிந்து மிகவும் அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்து வருகிறேன்.

உயிரிழந்தவர்களின் உடல்களை தமிழ்நாட்டிற்கு உடனடியாகக் கொண்டு வருவதற்குக் குவைத் நாட்டிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் அங்குள்ள தமிழ் அமைப்புகளுடன் இணைந்து, நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அயலகத் தமிழர் நலத் துறைக்கு உரிய அறிவுரைகளை வழங்கியுள்ளேன். அதன் பயனாக, உயிரிழந்த ஏழு தமிழர்களின் உடல்களும், தனிவிமானத்தின் மூலம் இந்தியாவிற்குக் கொண்டுவர விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ரூ. 5 லட்சம் நிதி உதவி வழங்க உத்தரவு!**

இந்தியாவை வந்தடையும், தமிழர்களின் உடல்களை உடனடியாகத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து, அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும் பணிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. இந்நிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில் தலா 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

**காயமுற்றவர்களுக்குத் தேவையான உதவிகள்!**

இது மட்டுமல்லாமல், இந்தக் கொடிய தீவிபத்தில் காயமடைந்து, குவைத் நாட்டிலேயே, சிகிச்சை பெற்று வரும் நம் தமிழ்ச்சொந்தங்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டிடுமாறு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறைக்கு நான் அறிவுரை வழங்கியதையொட்டி, உரிய நடவடிக்கைகளை அத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைந்து குணமடைய தேவையான உதவிகளை குவைத் நாட்டிலுள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து அயலகத் தமிழர் நலத்துறை துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குவைத் நாட்டில் பணிபுரிந்து வரும் தமிழர்கள், அங்கு கொடிய தீவிபத்திற்கு ஆளானதுடன், உயிர்களை இழந்தும், தீக்காயங்களுக்குச் சிகிச்சைகள் பெற்றும் வரும் நிலையை எண்ணி, வேதனையில் ஆழ்ந்துள்ள என் அருமை தமிழ்நாட்டு உறவினர்களுக்கு, தமிழ்நாடு அரசு எல்லா உதவிகளையும் வழங்கிடத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொடர்புகொள்ள தொலைபேசி எண்கள்.**

மேலும், இந்த விபத்து தொடர்பான விவரங்களை அறிந்து கொள்வதற்கு அயலகத் தமிழர் நலத்துறையின் கீழ்க்காணும் தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவிற்குள் தொடர்பு கொள்வதற்கு உரிய தொலைபேசி எண். +91 1800 309 3793;

அதே போன்று குவைத் நாட்டில் தொடர்பு கொள்வதற்கு உரிய தொலைபேசி எண் +91 80 6900 9900, +91 80 6900 9901. இந்த இரண்டு எண்கள் வாயிலாகவும், அயலகத் தமிழர் நலத்துறையைத் தொடர்பு கொண்டு தேவைப்படும் தகவல்களைப் பெற்றிடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் –

# 5 மாதங்களில் 23 லட்சம் சுற்றுலாப் பயணிகள் படகுப் பயணம்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

*சென்னை, ஜூன் 15 -*

*தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் படகு குழாம்களில் 2024 ஜனவரி முதல் 2024 மே மாதம் வரை 5 மாதங்களில் மொத்தம் 23,15,101 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்றனர் - என சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல் தெரிவித்தார்.*

*சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத் துறை அமைச்சர் .கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி முன்னிலையில் நேற்று முன்தினம் (13.6.2024) நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது:*

*முதலமைச்சர் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் கண்டறியும் வகையில் அமுதகம் என்று பெயர் சூட்டியுள்ளார். சுற்றுலா கொள்கை 2023 ஐ வெளியிட்டு, சுற்றுலாத் துறையில் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப் படகுகள் என மொத்தம் 590 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி புதிய படகு குழாம்கள் சுற்றுலா பயணிகளுக்காக பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.*

*2024 ஜனவரி மாதம் 3,92,142, பிப்ரவரி மாதம் 2,74,078, மார்ச் மாதம் 4,79,078, ஏப்ரல் மாதம் 5,36,513, மே மாதம் 6,33,290 என 2024 ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை 5 மாதங்களில் மொத்தம் 23,15,101 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்றனர்.*

*இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.*



சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (13.6.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி கலந்து கொண்டார்.




முதலமைச்சர் அவர்கள், பயிலும் பள்ளியிலேயே மாணவ, மாணவிகளுக்கு ஆதார் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவித்ததை தொடர்ந்து திருச்சிராப்பள்ளி பீமநகர், மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு ஆதார் பதிவு செய்யும் பணியினையும், வங்கிக் கணக்கு, அஞ்சல் கணக்கு தொடங்குவதற்கான முகாமில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கிருஷ்ணப்பிரியா, நகர பொறியாளர் சிவபாதம், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மாநகராட்சி, பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில்

# 3 இடங்களில் ஆட்டோ நிறுத்தம் திறப்பு - கொடியேற்று விழா!

## டாக்டர்.எ.வ.வே.கம்பன் திறந்து வைத்து, நல உதவிகள் வழங்கினார்!

*திருவண்ணாமலை, ஜூன் 15 -*

*திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில் மூன்று இடங்களில் ஆட்டோ நிறுத்தம் மற்றும் கொடியேற்று விழா நடைபெற்றது. கழக மருத்துவர் அணித்துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் கலந்து கொண்டு பெயர் பலகைகளை திறந்து வைத்து நல உதவிகள் வழங்கினார்.*

*13.06.2024 வியாழன் அன்று காலை 10.00 மணிக்கு திருவண்ணா மலை தெற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு, மூன்று இடங்களில் ஆட்டோ நிறுத் தம், கொடியேற்று விழா மற்றும் நல உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம் தலைமை வகித்தார்.*

*மாவட்ட துணை அமைப்பாளர்கள் மெட்ராஸ் கே.சுப்பிரமணி, ஏ.டபுல்.யு.ஷாஜகான், கி.ஜெய பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆட்டோ நிறுத்தம் தலைவர் பி.சசிகுமார் அனைவரையும் வரவேற்று பேசினார்.*

*திருவண்ணாமலை கற்பக விநாயகர் கோவில் தெருவில் பேரறிஞர் அண்ணா ஆட்டோ ஓட்டுநர் சங்கம், அசலியம்மன் கோயில் தெரு அருகில் உதயநிதி ஸ்டாலின் ஆட்டோ ஓட்டுநர் சங்கம், அருணை மருத்துவர் கல்லூரி அருகில் அமைச்சர் எ.வ.வேலு ஆட்டோ, ஆம்புலன்ஸ், டூரிஸ்ட்கார் ஓட்டுநர் சங்கம் ஆகிய நிறுத்தங்களில், கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் பெயர் பலகைகளை திறந்து வைத்தும், கழக கொடியை ஏற்றி வைத்தும் சீருடை மற்றும் அறுசுவை உணவு உள்ளிட்ட நல உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.*

*விழாவில் கலந்துகொண்டு மாவட்ட பொருளாளர் எஸ். பன்னீர்செல்வம், நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன், மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியா ப.விஜயரங்கன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் மாவட்ட அமைப்பாளர்கள் காலேஜ் கு.ரவி, எஸ்.டி.ஆர்.எஸ். பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம் சரவணன், நகர மன்ற உறுப்பினர் அருணா ரவி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் லக்கி அரவிந்து, ராயல் தியாகு, டிராவல்ஸ் பிரகாஷ், இரா.இராஜசேகர், வட்ட செயலாளர்கள் கோல்டு மஞ்சு, வழக்கறிஞர் அருண் குமார், எஸ்.சுரேஷ் குமார். ஆட்டோ ஓட்டுநர் சங்க நிர்வாகிகள் கே.மணிகண்டன், கே.வேங்கடேசன், ப.சுப்பிரமணி, கே.அருள், ஆர்.அய்யப்பன், வி.சரவணன், வி.கோபி, எஸ்.வீரமணி, பி.முருகன், பி.பாஸ்கரன், வி.குமார், வி.ரவி (எ) ஆறுமுகன், சி.விக்னேஷ், எம்.கொடியரசன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

*நிறைவாக அருணை மருத்துவக்கல்லூரி ஆட்டோ ஓட்டுநர் சங்க தலைவர் ஆர். அருள்குமரன் நன்றி கூறினார்.*



உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் பேசினார். உடன் மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார், பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், காசிலிங்கம், பொன்தோஸ், அன்வர்கான், பரமேஷ்குமார், உதகை நகர செயலாளர் ஜார்ஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர். இக்கூட்டத்தில் கோவையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் திரளாகப் பங்கேற்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.